**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், நாகப்பட்டினம்.**

முன்னிலை: திரு.ர.ராமச்சந்திரன் B.Sc., L.L.B.,

மாவட்ட உரிமையியல் நீதிபதி, நாகப்பட்டினம்.

2057 திருவள்ளுவராண்டு ஸ்ரீபராபவ வருடம் ஆனித் திங்கள் 19-ம் நாள்

2026 -ம் ஆண்டு ஜுலை மாதம் 03-ம் நாள் வெள்ளிக்கிழமை

**அசல் வழக்கு எண்: 54/2024**

**CNR.No.TNNG04-000086-2024**

M. அழகர் ....வாதி

....எதிர்...

S. சந்திரசேகர் ......பிரதிவாதி

இவ்வழக்கு கடந்த 27.04.2026 அன்று என் முன் இறுதி விசாரணைக்காக வந்தபோது, வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.N.ஜயப்பன் அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதிகள் தரப்பில் ஆஜரின்றித் தோன்றாத் தரப்பினராக்கப்பட்டும் இருந்த நிலையில், வாதி தரப்பு வாதம் மற்றும் சாட்சியம், சான்றாவணங்களைப் பரிசீலனை செய்து, இன்று இந்நீதிமன்றம் பகரும்.....

**//தீர்ப்புரை//**

இவ்வழக்கின் வாதிக்கு பிரதிவாதி செலுத்த வேண்டிய அசல் மற்றும் வட்டி தொகையினை வாதிக்கு செலுத்தி வைக்குமாறும் இவ்வழக்கிற்கு வாதிக்கு ஏற்பட்ட செலவுத்தொகையினை பிரதிவாதி செலுத்தி வைக்கக்கோரியும் உரிமையியல் விசாரணை நடைமுறை சட்டம், ஆணை 7, விதி 1-ன் படி இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. வாதி தாக்கல் செய்துள்ள வழக்குரையின் சுருக்கம்:**

வாதி தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ள சங்கதிகள் யாதெனில், வாதியானவர் கூலி

RANGANATHAN RAMACHANDIRAN
Digitally signed by RANGANATHAN RAMACHANDIRAN
Date: 2026.07.03 16:07:17 +0000

வேலை செய்து குடும்பத்தை காப்பாற்றி வருகிறார், வாதியும் பிரதிவாதியும் நண்பர்கள் ஆவார்கள். பிரதிவாதியானவர் கடந்த 12.04.2023 ம் தேதி வாதியிடம் வாதியின் ஊரான சியாத்தமங்கை கிராமத்திற்கு வந்து அவருடைய வீட்டு வியாபாரத்திற்காகவும் மற்றும் சில்லரை கடன்களை தீர்ப்பதற்காகவும் அவசர செலவிற்காகவும் தனக்கு ஐம்பதாயிரம் வேண்டுமெனவும் மேற்படி தொகைக்கு மாதத்திற்கு 100 க்கு ரூ-1 வட்டி சேர்த்து தருவதாக கூறியதால் வாதியானவர் அன்றைய தினம் தன்னிடம் பணம் இல்லை எனவும் மறுநாள் வீட்டிற்கு வந்து பெற்றுக் கொள்ளவும் என கூறியுள்ளார். இதன்படி வாதி மறுநாள் 13.04.2023 அன்று வாதி ரூ. 50,000/- (ரூபாய் ஐம்பதாயிரம் மட்டும்) வாதியின் வீடு அமைந்துள்ள சியாத்தமங்கை கிராமத்திற்கு வந்து பிரதிவாதி பெற்றுச்சென்றுள்ளார் என்றும். வாதியிடம் மேற்படி தொகைக்கு மாதத்திற்கு ரூ-100 க்கு 1 ரூபாய் வீதம் வட்டி சேர்த்து வரும் தொகையினை வாதியிடமோ அவரது அதிகாரம் பெற்ற முகவரிடமோ கேட்கும்போது தொகையினை திரும்ப கொடுப்பதாக உறுதியளித்து ஒரு புரோ நோட்டினையும் பிரதிவாதி எழுதி கொடுத்துள்ளார் என்றும்.

**2.** வாதியும் பிரதிவாதியும் நண்பர் என்பதால் 6 மாதகாலம் பிரதிவாதி வாய்மொழியாக கால அவகாசம் கேட்டிருந்ததால் அமைதியாக இருந்து விட்டு பின்னர் கடந்த 18.12.2023 அன்று வாதி தான் அளித்த தொகை குறித்து பிரதிவாதியிடம் கேட்டபோது பிரதிவாதி தொகையினை அசலும் வட்டியுமாக ஒரு மாத காலத்தில் திருப்பி செலுத்தி விடுவதாக கூறிவிட்டு எவ்வித தொகையினையும் கொடுக்காமலும் தொகையினை திரும்ப கொடுக்க ஏற்பாடு செய்யாமல் வேண்டுமென்றே வாதியை ஏமாற்றி தொகையினை திரும்ப செலுத்தாமல் இருந்து வருகிறார் என்றும். வாதியானவர்

RANGANATHAN RAMACHANDIRAN
Digitally signed by RANGANATHAN RAMACHANDIRAN
Date: 2026.07.03 16:07:24 +0000

கடந்த 02.04.2024 தான் பிரதிவாதியிடம் கொடுத்துள்ள கடன் தொகையான ரூ. 50,000/- (ரூபாய் ஐம்பதாயிரம் மட்டும்) மற்றும் வட்டியுடன் திரும்ப செலுத்தும்படி வழக்கறிஞர் மூலம் கடந்த 02.04.2024 அன்று அறிவிப்பினை கொடுத்துள்ளார். மேற்கண்ட அறிவிப்பினை பிரதிவாதி கடந்த 05.04.2024 அன்று பெற்றுக் கொண்டு தற்போது வரை அசல் மற்றும் வட்டியை திருப்பி செலுத்தாததால் வாதியால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. இந்நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை அனுப்பப்பட்டு அழைப்பாணையை பெற்றுக்கொண்ட பிரதிவாதிகள் நீதிமன்றத்தில் ஆஜராகாததால் தோன்றாத்தரப்பினர் ஆக்கப்பட்டுள்ளனர்.

3. இவ்வழக்கில் எழுவினாக்கள் எதுவும் வனையப்படவில்லை.

**4. இந்த வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை:**

வாதி வழக்கில் கோரியுள்ள பரிகாரம் வாதிக்குக் கிடைக்கத்தக்கதா? என்பதேயாகும்.

வாதி தரப்பில் வாதி வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.3 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

**5. பிரச்சனைக்கான தீர்வு:**

வாதி தாக்கல் செய்துள்ள வழக்கை நிரூபிக்கும் விதமாக வாதி வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். வா.சா.1 நீதிமன்றத்தில் அளித்துள்ள முதல் விசாரணையில் வழக்குரையில் உள்ளவாறு குறிப்பிட்டு சாட்சியமளித்துள்ளார். வாதி தரப்பில் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.3 வரையிலான ஆவணங்கள் குறியீடு

RANGANATHAN RAMACHANDIRAN
Digitally signed by RANGANATHAN RAMACHANDIRAN
Date: 2026.07.03 16:07:33 +0000

செய்யப்பட்டுள்ளன.13.04.2023 வாதிக்கு பிரதிவாதி எழுதி கொடுத்த புரோநோட் அசல் வா.தா.சா. 1 ஆகும். 02.04.2024 தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் வா.சா.ஆ.2 ஆகும். 05.04.2024 பிரதிவாதி அறிவிப்பை பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புதல் அட்டை அசல் வா.தா.சா. 3 ஆகும்.

**6.** வா.சா.ஆ.1 ஆவணம் பிரதிவாதி வாதிக்கு எழுதி கொடுத்த பிராமிசரி நோட்டு ஆகும். மேற்படி ஆவணங்களை பரீசிலனை செய்கையில் , கடந்த 13.04.2024 ம் ஆண்டு பிரதிவாதி வாதியிடம் 50,000/- ரூபாய் கடனாக பெற்றுள்ளார் என்பதும் மேற்படி கடனுக்கு மாதம் 1- வட்டி திருப்பி தருவதாகவும் பிரதிவாதி எழுதி கொடுத்த பிராமிசரி நோட்டு மூலம் தெளிவாகிறது.

வா.தா.சா 2 ஆவணம் பிரதிவாதிக்கு வாதி அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு ஆகும். மேற்கண்ட ஆவணங்களை பரீசிலனை செய்கையில் பிரதிவாதி வாதியிடம் வாங்கிய 50,000/- ரூபாய் கடனையும் அதற்கு உண்டான வட்டியையும் 02.04.2024 வரை செலுத்தவில்லை என்பது வா.தா.சா. 2 ஆவணம் மூலம் தெரியவருகிறது. வா.தா.சா. 3 ஆவணம் வாதி அனுப்பிய அறிவிப்பை பிரதிவாதி பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புதல் அட்டை ஆகும்.

பிரதிவாதி வாதியிடம் கடந்த 13.04.2023 ம் ஆண்டு வாதியிடம் 50,000/- ரூபாய் 1 %வட்டிக்கு கடனாக பெற்றுள்ளார் என்பதும் அதனை தற்போது வரை பிரதிவாதி செலுத்தவில்லை என்பதை வாதி தரப்பில் தகுந்த சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் நிரூபித்துள்ளதால் பிரதிவாதி வாதிக்கு ரூபாய் 57,500/- யை வாதியிடம் திரும்ப செலுத்த வேண்டுமென்று இந்நீதிமன்றம் முடிவு காண்கிறது.

RANGANATHAN RAMACHANDIRAN Digitally signed by RANGANATHAN RAMACHANDIRAN Date: 2026.07.03 16:07:44 +0000

**7.** வாதி தரப்பு வழக்கைப் பொய்ப்பிக்கும் வகையில் பிரதிவாதிகள் தரப்பில் எவ்வித சாட்சியமும், சான்றாவணங்களும் தாக்கல் செய்யப்படவில்லை. பிரதிவாதிகளும் இந்த வழக்கில் தோன்றாத்தரப்பினராக்கப்பட்டுள்ளார்கள். ஆனால் வாதி தரப்பில் இந்த வழக்கு தகுந்த சாட்சி மற்றும் சான்றாவணங்கள் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது.

எனவே வாதி வழக்கில் கோரியுள்ளபடி, பிரதிவாதி வாதிக்கு ரூபாய் 57,500/- யை இத்தீர்ப்புரைப் பிறப்பிக்கப்பட்ட 2 மாத காலஅவகாசத்திற்குள் கொடுக்க வேண்டுமென்று ஒருதலைப்பட்சத் தீர்ப்புரை பகரப்படுகிறது.

**முடிவாக**, வாதி தாக்கல் செய்துள்ள வழக்கை செலவுத் தொகையுடன் அனுமதித்து, பிரதிவாதி வாதிக்கு ரூபாய் 57,500/- யை இத்தீர்ப்புரைப் பிறப்பிக்கப்பட்ட 2 மாதத்தில் திருப்பி தர வேண்டுமென்று உத்தரவிடப்படுகிறது. ரூபாய் 50,000/- க்கு இவ்வழக்கு தாக்கல் செய்தது முதல் தொகை வசூலிக்கப்படும் நாள் வரை 9% வட்டியுடன் பிரதிவாதியிடமிருந்து பெற வாதி உரிமை உடையவர் என்று தீர்ப்பளிக்கப்படுகிறது.

இத்தீர்ப்புரையானது என்னால் சுருக்கெழுத்துத் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் பதிவெடுத்து பிழைநீக்கம் செய்து இன்று 03.07.2026 அவையறிய பகரப்பட்டது.

RANGANATHAN RAMACHANDIRAN

Digitally signed by RANGANATHAN RAMACHANDIRAN
Date: 2026.07.03 16:07:56 +0000

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

நாகப்பட்டினம்.

**வாதி தரப்பு சாட்சி**:

வா.சா.1 திரு. M. அழகர் (வாதி)

**வாதி தரப்பு சான்றாவணங்கள்**:

| | | | |
|---|---|---|---|
| வா.சா.ஆ.1 | 13.04.2023 | வாதிக்கு பிரதிவாதி எழுதி கொடுத்த புரோ நோட் | அசல் |
| வா.சா.ஆ.2 | 02.04.2024 | பிரதிவாதிக்கு வாதி வழக்கறிஞர் கொடுத்த வழக்கறிஞர் அறிவிப்பு | அலுவலக நகல் |
| வா.சா.ஆ.3 | 05.04.2024 | அறிவிப்பினை பிரதிவாதி பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புதல் அட்டை | நகல் |

**பிரதிவாதிகள் தரப்பு சாட்சி** : இல்லை

**பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணங்கள்** : இல்லை

RANGANATHAN RAMACHANDIRAN

Digitally signed by RANGANATHAN RAMACHANDIRAN
Date: 2026.07.03 16:08:03 +0000

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

நாகப்பட்டினம்.

Draft / Fair Judgment
மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,

நாகப்பட்டினம்.

**அசல் வழக்கு எண்: 54/2024**

நாள்: 03.07.2026